**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
**பொது அலுவல்கள் பிரிவு**
தொ.பே.: **+94 (11) 249-8100** ● பெக்ஸ்: **+94 (11) 244-9070**
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20190619

**பிராந்தியத்துக்கான விஜயத்தின் போது அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக்கேல் ஆர். பொம்பேயோவினால் இலங்கைக்கு வருகை தரமுடியவில்லை**

**கொழும்பு, ஜுன் 19**: ஜப்பானில் நடைபெறும் ஜி-20 உச்சிமாநாட்டிற்கு ஜனாதிபதி டொனால்ட் ஜே. ட்ரம்புடன் பயணித்தல் உள்ளிட்டவை அடங்கலான அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக்கேல் ஆர். போம்பேயோவின் வரவிருக்கும் இந்து-பசுபிக் பிராந்தியத்துக்கான விஜயத்தின் போதான தவிர்க்க முடியாதா திட்டமிடல் நெருக்கடிகள் காரணமாக முன்னர் அறிவிக்கப்பட்டதை போன்று இராஜாங்க செயலாளரினால் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள முடியாது போயுள்ளது.

இம்முறை கொழும்புக்கு விஜயம் செய்ய முடியாமல் போவதையிட்டு செயலாளர் பொம்பேயோ தமது வருத்தத்தை வெளிட்டுள்ளார். ஜனநாயம், பொருளாதார வளர்ச்சி மற்றும் சுதந்திரமானதும் பகிரங்கமானதுமான இந்து-பசுபிக் பிராந்தியம் ஆகியவற்றுக்கான உறுதிபாட்டில் வேரூன்றியுள்ள இலங்கையுடனான எமது உறுதியான பங்காண்மையை கோடிட்டு காட்டுவதன் நிமித்தம் பின்னொரு தினத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள அவர் எதிர்பார்த்துள்ளார்.

இந்த நோக்கங்களில் அமெரிக்கா உறுதியுடன் இருப்பதுடன், எமது நீண்டகால பங்காண்மையை மேலும் முன்னேற்றிக் கொள்ளவும் எதிர்பார்க்கிறது.